கவனிக்க.– 07.11.2025 ஆந் திகதிய 2462 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2463 - 2025 නොවැම්බර් මස 14 වැනි සිකුරාදා - 2025.11.14

2463 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 528 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 530 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2025, திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

527 - B 82737 - 403 (2025/11)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தை இரத்துச் செய்தல் - (104 பிரிவின்) தொடர்பான அறிவித்தல்**

தென் மாகாணத்தின் காலி மாவட்டத்தில், போபே போத்தல பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடை) எல். என். பியுமலீ லியனகே எனும் நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) உபபிரிவின் கீழ் அதி மேதகு சனாதிபதியால் 1994.07.12 வழங்கியுள்ள இலக்கம் கா/9/அ 15439 போபோ/ முல/ கா. பே. 138 கொண்ட அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான போத்தல, நராவல, முலனஹேன வசிக்கும் ஹல்விட்டிய கன்காகம்கே சிரிபாலவிடம் கையளித்து காலி மாவட்டபதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் எல். டீ. ஓ. பீ. 04/24 இன் கீழ் 1994.09.21 ஆம் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின்னுரிமையாளராவதற்காக சட்டபூர்வமாக உரிமையுள்ள ஒருவர் இல்லாதமையால் அல்லது உரிமையுள்ள ஒருவர் இருப்பினும் அவன்/ அவள் பின்னுரிமையாளராக விரும்பாமையால் பின்னுரிமையாளராக நியமனம் பெற ஒருவர் இல்லையென அறிக்கைப்பட்டிருப்பதால் அவ் அளிப்புப்பத்திரத்தை மேல் குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துசெய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என இத்தால் அறியத்தருகிறேன். அவ்விடயம் பற்றி ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் 2025.12.05 ஆம் திகதிக்கு முன் என்னிடம் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

காலி நிர்வாக மாவட்டத்தில் போபெ போத்தல பிரதேச செயலாளர் பிரிவின் கடவத்சத்தர பற்றில்/ கேரளையில் 111 எப முலன கிழக்கு அலுவலர் பிரிவில் நராவல எனும் ஊரில் அமைந்துள்ளதுமான, நில அளவை நயாகத்தின் பொறுப்பிலுள்ள மற்றும் நில அளவை நாயகத்தால் தயாரிக்கப்பட்ட இலக்கம் 90.3.02 ஓ 18/35 - 37 கொண்ட வெளிக்களத்தாளில்/ நில அளவை நாயகத்தால் தயாரிக்கப்பட்ட இலக்கம் அ. வ. கா. 2506 கொண்ட கண்டமிடும் வரைப்படத்தில் இலக்கம் 31 கொண்ட காணித்துண்டாக காட்டியுள்ளதுமான அளவில் 0.046 ஹெக்டயார் விசாலமுள்ளதுமான பின்வருமாறு எல்லைக்கொண்டதுமான அரச காணி, முலனஹேன

வடக்கு : துண்டிலக்கம் 32 மற்றும் 16;
கிழக்கு : துண்டிலக்கம் 30;
தெற்கு : துண்டிலக்கம் 39 மற்றும் 40;
மேற்கு : துண்டிலக்கம் 40, 39 மற்றும் 38.

எல். என். பியுமாலி வியனகே,
பிரதேச செயலாளர்,
போபே போத்தல.

2025, யூன் 04

11 - 174/2

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உட் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்துச்செய்தலுக்கான - (104 பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

தென் மாகாணத்தின் காலி மாவட்டத்தில், நாகொட பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் / பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கிடை) சதிஷானி லக்னிமா யத்தெஹிகே எனும் நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4)

உபபிரிவின் கீழ் அதி மேதகு சனாதிபதியால் 1996.01.23 ஆம் திகதி வழங்கியுள்ள இலக்கம் கா/14/அ - 36388 எல். எல். 20836 கொண்ட அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான கெட்டகொட வசிக்கும் உடலமத்த கமகே ஜயதிஸ்ஸவிடம் கையளித்து காலி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் எல். டீ. ஓ. கே. 15/146 இன் கீழ் 1996.11.18 ஆம் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின்னுரிமையாளராவதற்கு சட்டபூர்வமாக ஒரு உரிமையாளர் இல்லாதமையால் அல்லது உரிமையாளர் ஒருவர் இருப்பினும் அவன்/ அவள் பின்னுரிமையாளராக விரும்பாமையால் பின்னுரிமைக்கு நியமனம் பெற ஒருவரும் இல்லையென அறிக்கையிடப்பட்டிருப்பதால் அவ் அளிப்புப்பத்திரத்தை மேல் குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துசெய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என இத்தால் அறியத்தருகிறேன். அவ்விடயம் பற்றி ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் 2025.12.05 ஆம் திகதிக்கு முன் என்னிடம் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

காலி நிர்வாக மாவட்டத்தில் நாகொட பிரதேச செயலாளர் பிரிவின் வடக்கு கங்கபட பற்றில் / கேரளையில் கெட்டகொட வடக்கு கிராம அலுவலர் பிரிவில் கெட்டகொட எனும் ஊரில், அமைந்துள்ளதுமான, காலி மாவட்ட நில அளவை அதிகாரியின் பொறுப்பிலுள்ள மற்றும் நில அளவை நாயகத்தால் தயாரிக்கப்பட்ட இலக்கம் - கொண்ட வெளிக்களத்தாளில்/ ஆல் தயாரிக்கப்பட்ட இலக்கம் இ. கி. வ. 526 கொண்ட கண்டமிடும் வரைபடத்தில் - ஆல் தயாரிக்கப்பட்ட இலக்கம் - கொண்ட காணி உரித்துப்படத்தில் இலக்கம் - கொண்ட காணித்துண்டாக பிரதிநிதிதுவப்படுத்தியுள்ள அளவில் 01 (ஒன்று) ஹெக்டயார் / ஏக்கர் (இல்லை) 00 ரூட் 00 பேர்ச் விசாலமுள்ளதுமான பின்வருமாறு எல்லைகளைக்கொண்டதுமான அரச காணி

வடக்கு : கிராமசபை வீதி;
கிழக்கு : டப். ஜீ. மர்தேனிஸ் என்பவரின் காணி;
தெற்கு : சிரில் அபேசுந்தர அனுபவிக்கும் காணி;
மேற்கு : குணசேகர என்பவர் அனுபவிக்கும் காணி.

சதிஷானி லக்னிமா யத்தெஹிகே,
பிரதேச செயலாளர்,
காலி/ நாகொட.

2025, யூலை 09.

11 - 174/3

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

பின்னிணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உட் பிரிவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்தச்செய்தல் - (104 பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

தென் மாகாண சபையின் காலி மாவட்டத்தில், நாகொட பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் சதிஷானி லக்னிமா யத்தெஹிகே எனும் நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) உபபிரிவின் கீழ் அதி மேதகு சனாதிபதியால் ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தாறு யூலை மாதம் முப்பதாம் திகதி வழங்கியுள்ள இலக்கம் கா/அ/8447 எல். எல். 36695 கொண்ட அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான நியாகம கமகே டெனீ என்பவரிடம் கையளித்து காலி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் எல். டீ. ஓ. கே. 3ஏ/63 இன் கீழ் 1987 பெப்பருவரி 11 ஆம் பதிவுசெய்யப்பட்டுள்ள கீழ் அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின்னுரிமையாளராவதற்கு விரும்பாமையால் பின்னுரிமைக்கு நியமனம் பெற ஒருவரும் இல்லையென அறிக்கையிடப்பட்டிருப்பதால் அவ் அளிப்புப்பத்திரத்தை மேல் குறிப்பிட்ட சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துசெய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என இத்தால் அறியத்தருகிறேன். அவ்விடயம் பற்றி ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் 2025.12.05 ஆம் திகதிக்கு முன் என்னிடம் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

காலி நிர்வாக மாவட்டத்தில் நகொட பிரதேச செயலாளர் பிரிவின் வடக்கு கங்கபட பற்றில் ஊரல கிராம அலுவலர் பிரிவில் ஊரல எனும் ஊரில் அமைந்துள்ள, நில அளவை நாயகத்தால் தயாரிக்கப்பட்டு அவர் பொறுப்பிலுள்ள இலக்கம் - கொண்ட வெளிக்களத்தாளில் இலக்கம் அ. வ. கா. 1805 கொண்ட வரைபடத்தில் இலக்கம் 43 கொண்ட காணித்துண்டாக பிரதிநிதித்துவப்படுத்தியுள்ள அளவில் ஏக்கர் (இல்லை) 01 (ஒன்று) ரூட் 04 (நான்கு) பேச்ச இருப்பதாக கணக்கிட்டுள்ள அரலியகந்த என்று அழைக்கப்படுகின்ற பின்வருமாறு எல்லைசளைக்கொண்ட அரச காணித்துண்டு.

வடக்கு : இக் காணியின் துண்டிலக்கங்கள் 39 மற்றும் 40;
கிழக்கு : இக் காணியின் துண்டிலக்கங்கள் 40 மற்றும் 42;
தெற்கு : இக் காணியின் துண்டிலக்கங்கள் 32, 42 மற்றும் 44;
மேற்கு : இக் காணியின் துண்டிலக்கங்கள் 32 மற்றும் 44.

சதிஷானி லக்னிமா யத்தெஹிகே,
பிரதேச செயலாளர்,
நாகொட.

2025, யூலை 16.

11 - 174/4

# நானாவித காணி அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/79773.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: NCP/PLC/L5/MT/04/දීර්ඝකාලීන.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

அனுராதபுரம் மாவட்டத்தின் மிஹிந்தலை பிரதேச செயகப் பிரிவின் இலக்கம் 576, கஹபத்விலகம கிராம அலுவலர் பிரிவின் திரப்பனே கிராமத்தின் அதிகாரம் பெற்ற நில அளவையாளரால் தயாரிக்கப்பட்ட 03126 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தின் துண்டு இலக்கம் 1 மூலம் காண்பிக்கப்பட்டுள்ள 6.0696 ஹெக்டேயர் பரப்பளவு கொண்ட அரசாங்கக் காணியை வர்த்தக நோக்கத்திற்காக இக்கோ பவர் ரினிவபல் எனர்ஜி (பிரைவட்) கம்பணியினால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வடக்கு: பாதை மற்றும் அரசாங்க காணி;
கிழக்கு: அரசாங்க காணி;
தெற்கு: அரசாங்க காணி;
மேற்கு: அரசாங்க காணி.

கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.09.26 முதல் 2055.09.25 வரை)

(ஆ) **வருடாந்த குத்தகைத் தொகை** : 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ. 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் (ரூ. 5,000,000.00) அல்லது ஐந்து மில்லியன் ரூபாவிலும் அதிகமாக இருக்கும் சந்தரப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகை தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

**தவணைத் தொகை** : தவணைத் தொகை அறவிடப்பட மாட்டாது;

(இ) இந்தக் காணியை வர்த்தக நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பித்து ஒரு (01) வருட காலத்திற்குள் மாகாண காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் திருப்த்தியடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(உ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டுள்ள/ அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(எ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஏ) 2025.09.26 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் கழியும் வரை உப குத்தகை அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொண்டிராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்ட வரி அறவிடப்படும்.

ஏனைய விசேட நிபந்தனைகள்

(அ) நிலத்திற்கு லேலே சூரிய பனல்களை (Solar Panel) நிர்மாணித்து நிலத்தில் ஊடு பயிர்ச் செய்கையொன்றை மேற்கொள்ளல் வேண்டும்;

(ஆ) சியம்பலாகஸ்வெவ உத்தேச வன ஒதுக்கு எல்லைக்கருகில் காணப்படுவதனால் உத்தேச வன ஒதுக்கிலிருத்து 10 மீட்டர் தூண்டல் வலயத்தை தவிர்த்து செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் வேண்டும்;

இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
“மிஹிகத மெதுர”,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, ஒற்றோபர் 30.

11 - 113/1

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/79774.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: NCP/PLC/L5/MT/04/දීර්ඝකාලීන.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

அனுராதபுரம் மாவட்டத்தின் மிஹிந்தலை பிரதேச செயகப் பிரிவின் இலக்கம் 581, மரதன்கல்ல கிராம அலுவலர் பிரிவின் எலப்பன்குளம் கிராமத்தின் அதிகாரம் பெற்ற நில அளவையாளரால் தயாரிக்கப்பட்ட 03125 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தின் துண்டு இலக்கம் 01 மூலம் காண்பிக்கப்பட்டுள்ள 4.6989 ஹெக்டேயர் பரப்பளவு கொண்ட அரசாங்கக் காணியை வர்த்தக நோக்கத்திற்காக இக்கோ பவர் ரினிவபல் எனர்ஜி (பிரைவட்) கம்பனியினால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வடக்கு: பாதை மற்றும் அரசாங்க காணி;
கிழக்கு: அரசாங்க காணி;
தெற்கு: அரசாங்க காணி;
மேற்கு: அரசாங்க காணி.

கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.09.26 முதல் 2055.09.25 வரை)

(ஆ) **வருடாந்த குத்தகைத் தொகை** : 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ. 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் (ரூ. 5,000,000.00) அல்லது ஐந்து மில்லியன் ரூபாவிலும் அதிகமாக இருக்கும் சந்தரப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகை தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

**தவணைத் தொகை** : தவணைத் தொகை அறவிடப்பட மாட்டாது;

(இ) இந்தக் காணியை வர்த்தக நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) குத்தகை ஆரம்பித்து ஒரு (01) வருட காலத்திற்குள் மாகாண காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர்திருப்தி யடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(உ) மாகாண காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) அமைக்கப்பட்டுள்ள/நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(எ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஏ) 2025.09.26 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் கழியும் வரை உப குத்தகை அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொண்டிராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்ட வரி அறவிடப்படும்.

**ஏனைய விசேட நிபந்தனைகள்**

(அ) நிலத்திற்கு லேலே சூரிய பனல்களை (Solar Panel) நிர்மாணித்து நிலத்திலல் ஊடு பயிர்ச் செய்கையொன்றை மேற்கொள்ளல் வேண்டும்;

இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம். சமரங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, ஒற்றோபர் 30.

11 - 113/2

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/76944.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: UPLC/L/13/BW/L/542.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தின் பண்டாரவளை பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 65A, கெபில்லேவெல தெற்கு கிராம அலுவலர் பிரிவின் கெபில்லேவெல தெற்கு கிராமத்தின் 0664 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தின் துண்டு இலக்கம் 1 ஊடாக காண்பிக்கப்பட்டுள்ள 0.0152 ஹெக்டேயர் பரப்பளவு கொண்ட காணித் துண்டை சங்க நடவடிக்கைகளுக்காக சமகி மரண உதவி சங்கத்தினால் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வடக்கு: பாதைக்கான ஒதுக்கு;
கிழக்கு: கூட்டுறவுக் கட்டிடத்திற்காக ஒதுக்கப்பட்ட காணி;
தெற்கு: விளையாட்டு மைதானத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள அரசாங்க காணி;
மேற்கு: பாதைக்கான ஒதுக்கு.

03. கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : ஐந்து (05) வருடங்கள் (2025.09.26 முதல் 2030.09.25 வரை)

**வருடாந்த குத்தகைத் தொகை** :தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில், 2025 ஆம் ஆண்டில் காணியின் சந்தைப் பெறுமதயின் 1/2% ஆகும்.

(ஆ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் இந்தக் காணியை சங்க நடவடிக்கைகளுக்குத் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(இ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் இந்தக் குத்தகை ஆரம்பித்து ஒரு வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியிடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டடுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(உ) அமைக்கப்பட்டுள்ள/ நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களை சிறப்பான அபிவிருத்தி நிலைமையுடன் பேணிவரல் வேண்டும்;

(ஊ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(எ) 2025.09.26 ஆம் திகதி முதல் ஐந்து (05) வருடங்கள் கழியும் வரை உப குத்தகை அல்லது உரிமை மாற்றங்களுக்கு அனுமதி வழங்கப்பட முடியாது;

(ஏ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொண்டிராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்ட வரி அறவிடப்படும்.

வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

எஸ். வீ. ஏ. டீ. இஷாரா எம். சமரதுங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, ஒற்றோபர் 27.

11 - 147

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது